بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 18/11/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 37 அன்னாரது வாழ்க்கை நிகழ்வுகள் மற்றும் புகழத்தக்க பண்புகள் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்புகள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களது வாழ்க்கையின் சம்பவங்கள் எடுத்துக் கூறப்பட்டு வந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது பார்வையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய அந்தஸ்து பற்றி முன்னரும் எடுத்துக் கூறப்பட்டு விட்டது. அதிலிருந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அன்னாரைத் தமது பிரதிநிதியாக நியமனம் செய்ய நாடினார்கள் என்பது தெரிய வருகிறது. இன்னும் கூறுவதாயின், அல்லாஹுத்தஆலா அபூபக்ர் (ரலி) அவர்களையே அன்னாருக்குப் பிறகு கலீஃபாவாகவும் பிரதிநிதியாகவும் ஆக்குவான் என்று சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தமது நோயின் போது, "உங்களது தந்தை அபூபக்ரை என்னிடம் அழைத்து வாருங்கள். நான் ஒன்றை எழுத (வைக்க) வேண்டும். ஏனென்றால், வேறு எவரும் நான்தான் அதிக உரிமை உடையவன் என்று கூறி விடுவார்களோ என்ற அச்சம் எனக்கு உள்ளது. ஆனால், அல்லாஹ் மற்றும் நம்பிக்கையாளர்கள் அபூபக்ர் அவர்களைத் தவிர மற்றவர்களை மறுத்து விடுவார்கள்" என்று கூறினார்கள்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு கூறப்பட்ட சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:*

இந்த நிகழ்விலுள்ள ஒரு சுருக்கமான பகுதியின் மூலம், மலையே உடைந்து விழுந்தது போன்றதோர் அவதூறு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது சுமத்தப்பட்டது என்பது தெளிவாகத் தெரிந்து விடுகிறது. ஆனால், அவர்களின் பெற்றோர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த நேசம் மற்றும் அன்னாருக்கான கண்ணியம், மகள் மீதான அன்பை விடப் பன்மடங்கு அதிகரித்திருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்)

அவர்கள் எந்நிலையில் பொருத்தமானதாகக் கருதினார்களோ அந்நிலையிலேயே தமது மகளை இருக்க விட்டார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூத் (ரலி) அவர்கள் இது பற்றி கூறுகிறார்கள்:** யார் யாருக்கு அவப்பெயரை ஏற்படுத்தினால் நயவஞ்சகர்களுக்கும் அவர்களின் தலைவர்களுக்கும் நன்மை பயக்கத்தக்கதாக இருக்க முடியும் என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது குற்றம் சாட்டி, ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆகியோருடன் பகைமை பாராட்டியிருக்க முடியும். ஏனென்றால், ஹஸ்ரத் ஆயிஷா ஒருவரின் மனைவியாகவும் மற்றொருவரின் மகளாகவும் இருந்தார்கள். இவ்விருவரும் எப்படிப்பட்ட மனிதர்களாக இருந்தார்கள் என்றால், அவர்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்தி அரசியல் ரீதியாகவும் நல்லொழுக்க ரீதியாகவும் சில மக்கள் பலன் பெற முடிந்திருக்கும். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதால் எவருக்கும் எவ்வித பலனும் கிடைத்திருக்க முடியாது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது பிற மனைவிமார்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை, அன்னாரது பார்வையில் வீழ்த்த, மேலும் தங்களது அந்தஸ்தை உருவாக்க ஏதேனும் பங்களித்திருக்கலாம் என்று கருத வாய்ப்புள்ளது. ஆனால், அவ்வாறு ஏதும் இருக்கவில்லை என்பதற்கு வரலாறு சாட்சியாகும். ஒரு மனைவியைப் பற்றி குறிப்பு உள்ளது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர்களிடம் இதுகுறித்து கேட்ட போது அவர்கள், "நான் ஆயிஷாவிடம் நன்மையை அன்றி வேறெதனையும் கண்டதில்லை" என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்குப் பிறகு எவருக்கும் ஏதேனும் அந்தஸ்து இருக்கின்றது என்றால், அது அபூபக்ர் அவர்களுடைய அந்தஸ்தே ஆகும் என்று நபித்தோழர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள் என்று நபி மொழியில் தெளிவாக வந்துள்ளது. ஹஸ்ரத் ரஸலே கரீம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு தனது ஆட்சி அதிகாரத்திற்கான சாத்தியக்கூறு கைவிட்டு செல்வதைக் கண்ட அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் வேறொன்றும் செய்ய இயலாத காரணத்தினால், முஹம்மது (ஸல்) அவர்கள் மரணிக்க வேண்டும்; நான் மதீனாவின் மன்னன் ஆக வேண்டும் என்று விருப்பம் கொண்டிருந்தான்.

எனவே, அவன் தனது நோக்கத்தை முழுமைபடுத்துவதற்காக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறை சுமத்தினான். அப்போதுதான் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது வெறுப்பு உருவாகும். மேலும், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்கு ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களது மற்றும் முஸ்லிம்களது பார்வையில் இருந்த கண்ணியம் குறைந்து கொண்டே வரும். மேலும், இவ்வாறு அன்னார் எதிர்காலத்தில் கலீஃபாவாக ஆகும் சாத்தியம் இருக்காது.

ஆகவே இவ்விஷயத்தைதான் அல்லாஹுத் தஆலா திருக்குர்ஆனில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளான்:

اِنَّ الَّذِیۡنَ جَآءُوۡ بِالۡاِفۡکِ عُصۡبَۃٌ مِّنۡکُمۡ ؕ لَا تَحۡسَبُوۡہُ شَرًّا لَّکُمۡ ؕ بَلۡ ہُوَ خَیۡرٌ لَّکُمۡ

பொருள்: ''ஒரு பெரும் பொய்யைப் புனைந்துரைத்தவர்கள் நிச்சயமாக உங்களைச் சேர்ந்த ஒரு பிரிவினரே. நீங்கள் அதனை உங்களுக்குத் தீயதென்று கருத வேண்டாம். மாறாக, அது உங்களுக்கு மிகச்சிறந்ததே.'' அதாவது, இந்த அவதூறு உங்களது மேம்பாடு மற்றும் முன்னேற்றத்திற்குக் காரணமாக அமையும் என்று கூறியுள்ளான்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** அதிகாரம் நூரின் ஆரம்பத்திலிருந்து அதன் இறுதிவரை எவ்வாறு ஒரே விஷயம் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது. அல்லாஹுத்தஆலா ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டைப் பற்றி கூறியதற்குப் பிறகே கிலாஃபத் பற்றி கூறியுள்ளான். மேலும், கிலாஃபத் மன்னராட்சி அல்ல. அதுவோ இறை ஒளியை நிலை நாட்டுவதற்கான ஒரு வழிமுறையாகும் என்று கூறியுள்ளான். எனவேதான் அல்லாஹுத்தஆலா அதை நிலைநாட்டுவதைத் தனது கையில் வைத்துள்ளான். அது வீணாவது என்பது, நபித்துவத்தின் ஒளி மற்றும் இறைமையின் ஒளி வீணாவதாகும். எனவே, அவன் அந்த ஒளியை நிச்சயம் நிலைநாட்டுவான். மேலும், நபித்துவத்திற்குப் பிறகு மன்னர் ஆட்சியை ஒருபோதும் நிலை பெற விடமாட்டான். யாரை நாடுகிறானோ அவரை கலீஃபாவாக ஆக்குவான். இன்னும் கூறுவதாயின், முஸ்லிம்களில் ஒருவர் அல்ல, அதற்கும் மேற்பட்டு, பல மக்களை கிலாஃபத்தில் நிலைநாட்டி ஒளியின் காலகட்டத்தை நீடித்து விடுவான் என்று அவன் வாக்குறுதி அளிக்கிறான்.

எவ்வாறிருப்பினும் இந்த சம்பவத்திற்குப் பிறகு, மேலும், இதற்குப் பிறகு அல்லாஹ் தஆலாவின் செயல் ரீதியான சாட்சியத்தின் மூலமாகவும் நபித்துவத்திற்குப் பிறகு உடனடியாக கிலாஃபத்தின் எந்தத் தொடர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் அவர்களது முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப தொடர வேண்டி இருந்ததோ அது தொடர்ந்தது என்பது நிரூபணமானது. பிறகு, அல்லாஹ் தஆலாவின் வாக்குறுதிக்கு ஏற்ப ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாகவும் அந்த அமைப்பு மீண்டும் நிலைபெற்றது.

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது தன்னடக்கம் மற்றும் பணிவைப் பற்றி ஹஸ்ரத் ஸயீது பின் முஸைய்யிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:** ஒருமுறை நபியே கரீம் (ஸல்) அவர்கள் தமது சில தோழர்களுடன் ஒரு சபையில் அமர்ந்திருந்தார்கள். ஒரு மனிதர் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சண்டையிடத் தொடங்கினார். மேலும், அன்னாருக்கு மூன்று முறை துன்பம் இழைத்தார். ஆனால், அன்னார் அமைதியாக இருந்தார்கள். மேலும், மூன்றாவது முறைக்குப் பிறகு அன்னார் பதிலடி கொடுத்ததும் நபியே கரீம் (ஸல்) அவர்கள் எழுந்து நின்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டதற்கு, அன்னார் கூறினார்கள்: விண்ணில் இருந்து ஒரு வானவர்

இறங்கினார். அவர், அந்த மனிதர் உங்களைப் பற்றி கூறிய விஷயத்தைப் பொய் படுத்திக் கொண்டிருந்தார். நீங்கள் பதிலடி கொடுத்ததும் ஷைத்தான் வந்துவிட்டான். மேலும், எந்த சபையில் ஷைத்தான் வந்து விடுவானோ அந்த சபையில் நான் அமர மாட்டேன் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:** அபூபக்ரே! மூன்று விஷயங்கள் உள்ளன, அவை உண்மையில் நிலைத்துள்ளன. எவர் மீதாவது ஏதேனும் ஒரு பொருள் மூலமாக அநீதி இழைக்கும் போது அவர் வல்லமை படைத்த அல்லாஹ்வுக்காக மட்டும் அதனை கண்டும் காணாமல் விட்டுவிட்டால், அல்லாஹ் அவரைத் தனது உதவியின் மூலமாக கண்ணியப்படுத்தி விடுகிறான். பிறகு, எவரொருவர் நன்கொடையின் வாசலைத் திறக்கின்றாரோ, அதன் மூலமாக அவரது எண்ணம் உறவைப் பேண வேண்டும் என்று இருந்தால், அல்லாஹ் அதன் காரணமாக அவரது செல்வத்தைப் பெருமளவில் அதிகரித்து விடுகின்றான். மூன்றாவது எவர் ஒருவர் தனது செல்வத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்குடன் (யாசகம்) கேட்பதற்கான கதவைத் திறக்கின்றாரோ அல்லாஹ் அவருக்கு அதன் காரணமாகப் பற்றாக்குறையையும், குறைவையும் அதிகமாக ஏற்படுத்தி விடுகிறான்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது பண்புகளை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:** ''அன்னார் முழுமையான ஞானமுடையவராகவும், இறைஞானம் கொண்டவராகவும், மிகவும் மென்மையான இயல்புடையவராகவும், மிகவும் கருணை இயல்புடைய மனிதராகவும் இருந்தார்கள். மேலும், பணிவு மற்றும் ஏழ்மையான வாழ்வை கழித்து வந்தார்கள். மிகவும் மன்னிப்பவராகவும் கண்டும் காணாமல் இருப்பவராகவும் இருந்தார்கள். பரிவு மற்றும் கருணையின் மொத்த உருவமாகத் திகழ்ந்தார்கள். அன்னார் தமது நெற்றியின் ஒளியால் கண்டறியப்பட்டார்கள். அன்னாரது ஆன்மா படைப்பினங்களில் சிறந்தவராகிய ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுடைய ஆன்மாவுடன் ஒன்றிணைந்து இருந்தது. அன்னார் திருக்குர்ஆனின் புரிதல் மற்றும் இறைதூதர்களின் தலைவரும் மனித குலத்தின் பெருமிதமுமான நபி (ஸல்) அவர்களின் மீதான அன்பில் எல்லா மக்களைக் காட்டிலும் தனிச்சிறப்புடையவராக இருந்தார்கள். அன்னார் உண்மையான ஏக இறைவனின் பண்பில் வண்ணமயமாகி இருந்தார்கள். உண்மை - அன்னாரது உறுதியான திறமையாக இருந்தது. மேலும் சிறப்பான இயல்பாக இருந்தது. மேலும், அந்த உண்மையின் தாக்கங்களும் பிரகாசமும் அன்னாரது ஒவ்வொரு சொல் மற்றும் செயலில் வெளிப்பட்டன.'' **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது சிறப்புகள் மற்றும் மேன்மையைப் பற்றி கண்ணியமிக்க இறைவன் என் மீது வெளிப்படுத்தினான்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு பரிபாலிப்பவர்களுக்கெல்லாம் ரப் ஆகிய இறைவனின் மீது உறுதியான நம்பிக்கையும் காரணிகள் மீது

குறைவான கவனமும் இருந்தது. அன்னார் நல்லொழுக்கங்களில் நமது ரஸூல் மற்றும் தலைவர் (ஸல்) அவர்களது நிழலாக இருந்தார்கள். மேலும் அன்னாருக்குப் படைப்பினங்களில் சிறந்தவரான ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுடன் ஒரு நிரந்தர ஒப்புமை இருந்தது. மேலும் இதன் காரணத்தினால்தான் அன்னாருக்கு ஹுஸூர் (ஸல்) அவர்களது அருளிலிருந்து, மற்றவர்களுக்கு நீண்ட கால கட்டத்திலும், நீண்ட யுகத்திலும் பெற முடியாதவை எல்லாம் சிறிது காலத்திலேயே கிடைத்துவிட்டது.

**ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் கூறு**கிறார்கள்: 'நிச்சயமாக ஒவ்வொரு நபிக்கும் ஏழு உன்னதமான நண்பர்கள் வழங்கப்பட்டிருக்கிறார்கள். எனக்கு 14 நபர்கள் வழங்கப்பட்டிருக்கிறார்கள். அபூபக்ர் அவர்களும் அவர்களுள் ஒருவராவார்கள்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்குத் தபூக்கில் இருந்து திரும்பி வருகையில், 'இணை வைப்பாளர்கள் மற்ற மக்களுடன் இணைந்து ஹஜ் செய்கிறார்கள்; இணைவைப்பு வார்த்தைகளைக் கூறுகிறார்கள்; மேலும், நிர்வாணமாக கஅபா ஆலயத்தை வலம் வருகிறார்கள்' என்று தெரிய வந்தது. அப்போது அன்னார் அவ்வருடம் ஹஜ் செய்வதற்கான எண்ணத்தை விட்டு விட்டார்கள். அன்னார் ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களை ஹஜ்ஜுக்கு அமீராக நியமித்து மக்காவுக்கு அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) 300 தோழர்களுடன் மக்காவுக்குப் புறப்பட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் குர்பானிக்கான இருபது விலங்குகளையும் அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள். அவற்றின் கழுத்துகளில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தாமே தமது கைகளால் குர்பானியின் அடையாளமாக வளையங்களை அணிவித்தார்கள். மேலும், அடையாளம் இட்டார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தம்முடன் ஐந்து குர்பானி விலங்குகளை கொண்டு சென்றார்கள்.

அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அதிகாரம் தவ்பாவின் ஆரம்ப வசனங்களை அந்த ஹஜ்ஜின் சந்தர்ப்பத்தில் அறிவிப்பு செய்தார்கள். அது பற்றிய விளக்கம் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களது குறிப்பில் முன்னரே எடுத்துக் கூறப்பட்டு விட்டது.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களது குறிப்புகள் இன்ஷா அல்லாஹ் இனி மேலும் எடுத்துரைக்கப்படும் என்று கூறினார்கள்.*

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து ஜனாஸா தொழ வைப்பதற்கான அறிவிப்பு செய்தார்கள். அவற்றுள் ஒரு ஜனாஸா ஹாஸிர் ஜமாஅத்தின் முரப்பி* ***மதிப்பிற்குரிய முஹம்மது தாவூத் ஸஃபர் சாஹிப்*** *அவர்களுடையதாகும்.*

*அது தவிர, மர்ஹூம் மவ்லானா கரம் இலாஹி ஸஃபர் ஸாஹிப் அவர்களின் மனைவி* ***மதிப்பிற்குரிய ருக்கய்யா ஷமீம் பேகம் ஸாஹிபா*** *மற்றும் ஸாஹிப்ஸாதா மிர்ஸா ஹனீஃப் அஹ்மது ஸாஹிப் அவர்களது மனைவி*

*மதிப்பிற்குரிய தாஹிரா ஹனீஃப் ஸாஹிபா ஆகியோரது ஜனாஸா காயிப் இருந்தது.*

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* மூன்றாவது குறிப்பு, ஸய்யிது ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் அவர்களது மகளாகிய மதிப்பிற்குரிய தாஹிரா ஹனீஃப் ஸாஹிபா அவர்களுடையதாகும். மேலும் அன்னார் மிர்ஸா ஹனீஃப் அஹ்மது ஸாஹிப் மர்ஹூம் அவர்களின் மனைவியும் ஆவார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது மருமகள் ஆவார்கள். மேலும் எனது மாமியும் ஆவார்கள்.

அவர்கள் 1936 ஆம் ஆண்டு காதியானில் பிறந்தார்கள். அவர்களது தந்தை ஸய்யிது ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் அவர்கள் புகாரியின் விளக்க உரையும் எழுதியுள்ளார்கள். அவர்களது தாயாரின் பெயர் ஸய்யிதா ஸய்யாரா ஸாஹிபா ஆகும். அவர்கள் டமாஸ்கஸைச் சேர்ந்தவராவார்கள். அவர்களது தந்தை வழிப் பாட்டனாரான ஹஸ்ரத் டாக்டர் ஸய்யிது அப்துஸ் ஸத்தார் ஷாஹ் ஸாஹிப் அவர்கள் மூலமாக இவர்களது குடும்பத்தில் அஹ்மதிய்யத் வந்தது. இவர்கள் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் தாய் வழிப்பாட்டனார் ஆவார்கள். இவ்வாறாக இவர்கள் ஹுஸூர் (ரஹி) அவர்களின் மாமாவின் வழி உறவினர் ஆவார்கள்.

அல்லாஹுத்தஆலா அன்னாருக்கு மூன்று மகள்களையும் ஒரு மகனையும் வழங்கியுள்ளான். கிலாஃபத்துடன் மிகுந்த கலப்பற்ற தொடர்பிருந்தது. எனக்கும் தொடர்ந்து இவர்கள் கடிதம் எழுதி வந்தார்கள். இன்னும் கூறுவதாயின், ஒவ்வொரு குத்பாவுக்குப் பிறகும் பெரும்பாலும் இவர்களது கடிதம் வந்து கொண்டிருந்தது. மேலும் அதில் பல்வேறு விதமான கருத்துக்களும் இருந்து வந்தன. மிக அதிகமாக ஏழைகளைப் பராமரிக்கக் கூடியவராக இருந்தார்கள். அல்லாஹ் தஆலா அவர்களுடன் மக்ஃபிரத் மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. சான்றோர்களுடன் இருக்க வாய்ப்பளிப்பானாக. மேலும், அவர்களது பிள்ளைகளுக்கும் அவர்களது நன்மைகளைத் தொடரச் செய்கின்ற நல் வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)